# கவிஞர் வேழவேந்தரின் கவிதை வழி சமுதாயம்

**இர.சந்திரசேகரன்,**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*எஸ்.கே.எஸ்.எஸ் கலைக் கல்லூரி,*
*திருப்பனந்தாள்.*

தமிழ்க்கவிதை உலகில் சங்க காலம் என்பது புகழ் பூத்துக் குலுங்கிய பொற்காலமாய்த் திகழ்ந்தது. இயற்கையோடு இயற்கையாக இணைந்து வாழக் கற்றிருந்த பழந்தமிழனின் உணர்வுகளைச் சங்க இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டும் திறம் பெற்றிருந்தன. உள்ளதை உள்ளவாறு நயம்படக் கூறும் பாங்கும் ஆற்றலும் பெற்றவர்கள் சங்கப் புலவர்கள், இருப்பினும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒரு வெண்பாவில் மூவறம் கூறும் "திரிகடுகமும் நாலறம் மொழியும் நான்மணிக்கடிகையும்" ஐயறஞ் சொல்லும் "சிறுபஞ்சமூலமும் ஆற்றல் உணர்த்தும் ஏலாதியும் ஒரு பாவிற்குள் இத்தனை அறங்கள் வைப்பதெனப் பொருள் வேலி செய்து கொண்டமையின் இலக்கிய ஒட்டத்துக்கு அவ்வளவு இடம் கொடுக்கவில்லை என இலக்கியப் பேரறிஞர் வ.சு.ப.மாணிக்கனார் கூறுகின்றார்.

கவிதை மரபுகள் மாறிவரும் இக்காரத்திலும் மரபுநிலை மாறாத கவிதைகளை வடித்தளிப்பவர் கவிஞர் வேழவேந்தன் ஆவர். கருத்துக்களை நயம்படக் கூற வேண்டும் என்பதற்காக எதுகையையும் மோனையையும் வலிந்து அழைக்கும் கட்டாயம் அவருக்கு எழவில்லை. எதுகையும், மோனையும் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்து அவர் கவிதைகளில் அணி வகுப்பதைக் காணலாம். சீர் செம்மையுற வேண்டும் என்பதற்காகச் சொல்ல வந்த கருத்தைச் சிதைக்கும் தேவை எதுவும் எழவில்லை. இது,

*"காட்டுக்குள் பூக்கின்ற பூக்களெல்லாம்*
*கன்னியரின் முடியேறி மகிழ்வதுண்டா?*
*பூட்டுக்குள் ஒளிந்திருக்கும் பணத்தினாலே*
*பொருளாதாரப் புரட்சி வருவதுண்டா?"*

என்பன போன்ற அவரது கவிதைகளில், எதுகையும், மோனையும், சீரும், தளையும் மிக இயல்பாக அமைவதை உணரமுடிகிறது.

கவிஞன் ஆற்றல் மிக்கவன், அவனது கவிதைகள் எதையும் செய்ய வல்லன. ஆற்றல் மிக்க கவிதைகளைக் கருவியாகக் கொண்டுள்ள கவிஞன் எதைப் பாடவேண்டும் எப்படிப் பாடவேண்டும் என்பதற்கு பாவேந்தர்,

*"பொதுமக்கள் நலம் நாடிப் புதுக்கருத்தைச் சொல்க*
*புன்கருத்தைச் சொல்லுவதில் ஆயிரம் வந்தாலும்*
*அதற்கொப்ப வேண்டாமே*

என்று நல்வழிக் காட்டுகின்றார்.

பாவேந்தன் பரம்பரையில் வந்த வேழவேந்தர் பொதுமக்கள் நலம் நாடிப் புதுக்கருத்தைச் சொல்லும் பணியிலேயே தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வந்துள்ளார். நாடும் மொழியும் நம் இருகண்கள் அல்லவா? தமிழ் மண்ணிலே பிறந்தமைக்காக வேழவேந்தர் பூரிப்பும் பேருவகையும் அடைகின்றார். கவிஞர் இயற்கையைப் பாடுவதற்கு இயற்கையிலிருந்து நமக்கு பாடம் புகட்டும் வல்லமையும் பெற்றிருக்க வேண்டும். வேழவேந்தருக்கு இந்த வல்லமையும் இயல்பாய் அமைந்துள்ளது.

*“எழுந்தாலும் நெற்கதிர் போல் எழுதல் வேண்டும்*
*எரிந்தாலும் விளக்கைப்போல் எரிதல் வேண்டும்*
*அழுதாலும் னேடைபோல் அழுதல் வேண்டும்*
*அசைந்தாலும் தென்றலைப்போல் அசைதல் வேண்டும்*

என அவரது கவிதையில் இயற்கையை உற்றுப்பார்! பாடம் கேள்! தொண்டு செய்யக் கற்றுக் கொள்! தொண்டிலே தொடர்ந்து ஈடுபடு! என்னும் உண்மைகளைக் கவிஞர் உணர்த்துகின்றார். இது,

*“தன்மான இயக்கமாகத்*
*தலை தூக்கித் தாயகத்தின்*
*பொன் மானம் காப்பதற்கு*
*பூத்ததே நமதியக்கம் ”*

என இயக்கத்தையும்,

*செப்டம்பர் பதினைந்தாம் நாளில் காஞ்சித்*
*திருமண்ணில் நம் அண்ணா பிறக்காவிட்டால்*
*ஒப்பற்ற தமிழ்ப் பேச்சும் எழுத்தும் இங்கே*
*ஒயிலாக நடைபோடச் செய்வோர் யார்? யார்?*
*என அண்ணாவையும் தம் கவிதைத் திறத்தால்*
*எடுத்துரைத்தார்.5*

மாணவராக இருந்தபோதே ஆற்றல் மிக்க கவிதைகளை வடித்தளிக்கும் கவிஞராகத் திகழ்ந்தார் வேழவேந்தர். பின்னாளில் வழக்கறிஞராக, அமைச்சராகப் பல்வேறு பணிகளில் ஈடுபட்ட போதும் அவரது கவிதைக்கனல் அப்படியே தொடர்ந்து வந்துள்ளது.

சமுதாய விழிப்புணர்வு கொண்ட கவிஞர்கள் அறிவுரையும், இடித்துரையும் கூறி மக்களையும் ஆள்வோரையும் திருத்திப் புது வழி வகுத்து, காலத்தால் குன்றாய் புகழுடன் மனித இனத்தின் வழிகாட்டிகளாக இன்றும் நிலவி வருதல் கண் கூடு. இத்தகைய கவிஞர் பெருமக்களுக்குத் தமிழ் இலக்கியத்தில் கணிசமான இடம் உண்டு.

சோழன் கிள்ளிவளவன் ஆண்ட காலத்தில் ஒரு கட்டம் மழையில்லை, விளைச்சலில்லை, உழவர்கள் வாடும் நிலை அதனை மாற்றி உற்றது செய்ய வேண்டிய கடமையை அரசு செய்யவில்லை மாறாக வரிவசூல் மட்டும் வழக்கம் போல முனைப்புடன் நடைபெற்று வந்தது. இக்கொடுமை நிலையை அரசனிடத்து உரைப்பார் யார்? வெள்ளைக்குடி என்னும் ஊரில் உழவர் ஒருவர் புலமையும் பெற்றவர் இதனைச் செய்ய முன் வந்தார். கெஞ்சி இறைஞ்ச வேண்டியது தம் பணி என்று அவர் எண்ணவில்லை, உரிமையை நிலை நாட்டும் வீறு கொண்டார்.

கரிகால்வளவன் பெருவீரன் சேரனை ஒரு போரிலே வெற்றிகண்ட மகிழ்ச்சியுடன் அவையிலே வீற்றிருக்கிறான் அவனைக் காண வெண்ணிக்குயத்தியார் என்ற பெண் கவிஞர் வருகின்றார்.

நெஞ்சில் பட்ட புண்ணால் (புறங்காட்டியதால் அல்ல) முதுகிலும் புண்பட்டதாக நாணி வடக்கிருக்கும் சேரன் நிண்ணிலும் மேம்பட்டவன் என்று வெற்றி பெற்ற அரசனின் அவையில் தோல்வி கண்ட பகைவனின் சிறப்பை உரைக்கும் துணிவு கொண்ட பெண் புலவரையும் சங்கத் தமிழர் சமுதாயம் படைத்திருப்பதைக் காண்கிறோம்.

மற்ற கவிஞர்கள் அறிஞர்கள் சொல்லித் தான் நல்லாட்சி நடக்க வேண்டும் என்ற நிலை சமுதாயத்தில் நிலவவில்லை. அவ்வப்போது குறை நிகழும் போது தடுத்துக் காப்பதே கவிஞர் பணி. பொதுவாகவே எம் அரசன் நல்லாட்சி செய்பவன் என்று மக்கள் போற்றுவதையும், சிறந்த கவிஞர்களால் பாடப்படுவதையும் அரசர்கள் உயர்வென மதித்தனர் தான் கொண்ட வஞ்சினத்தில் வெற்றி பெறாவிட்டால்,

*கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்*
*குடி பழி தூற்றங் கோலேனாகுக*
*........... பலர் புகழ் சிறப்பிற்*
*புலவர் படாது வரைக*

என்றெல்லாம் கூறும் பாண்டியன் தலையாலங்கானத்துக் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பாடல் அரசர்கள் எதனை உயர்வாக மதித்தனர் என்பதற்கான சான்றுக்குள் ஒன்று.

இவ்வாறு நோக்குவோம் எனின் சமுதாய, அரசியல் ஒழுக்க நெறிகளின் மேம்பாட்டையும் அவை

வழுவும் போது தடுத்து இடித்துரைத்துக் காப்பதில் கவிஞர்களின் பெரும்பங்கையும் தமிழர் வரலாற்றில் நிறைய காணமுடிகின்றது. இதனை எண்ணிப் பெருமிதம் கொள்கிறோம். எல்லா நிலைகளிலும் அறமுறைத்த வள்ளுவரையும்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த உள்ளத்தோடு "பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்று மானிட சமத்துவத்தைத் தொட்டுக் காட்டிய கணியன் பூங்குன்றனாரையும், இன்று உலகம் முழுவதும் போற்றுகிறது. அரசர்களே கவிஞர்களாகவும் விளங்கி வந்துள்ளனர் என்பதையும் காண்கிறோம். கவிஞர் ஒருவர் அமைச்சராவதும் புதுமையன்று என்பதற்குச் சேக்கிழார், தாயுமானவர் போன்ற பலர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்.

கவிஞர் வேழவேந்தன் அவர்களைக் கவிஞராகத் தமிழுலகம் நன்கறிந்துள்ளது. தமிழகத்தின் இன்றையத் தேவையான மொழியுணர்வு, சமத்துவம் போன்ற கருத்துக்களையும் பிற நன்னெறிகளையும் கவிதையாகத் தந்துள்ளார். கேளிக்கைக் கவிஞர்களின் வரிசையிலிருந்து பெரிதும் விலகி நின்று சமுதாய உணர்வுள்ள சான்றோர் அணியில் முன் நிற்கும் கவியரசர் வேழவேந்தன் அவர்களைப் போற்றி மகிழ்வது தமிழறிஞர் பெருமக்களின் நல்லுணர்வுகளுக்குச் சிறந்த சான்றாகும். கவிஞர் வேழவேந்தன் அவர்கள் தமிழகத்தில் தொழிலாளர் நல அமைச்சராக இருந்த காலத்துச் செய்த தொண்டுகளின் பயன் அளவற்றது. ஆராவாரமின்றி அமைதியாக அவர் பணியாற்றிய பாங்கும், ஒன்றே போல வாழ்க்கை நெறி நிற்பதும், பொது வாழ்வில் ஈடுபட விரும்பும் புதியவர்களுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.


1. தூரலும் சாரலும் ப 64.

2. கவிஞர் கா.வேழவேந்தன் ஒரு பாட்டருவி ப.70.

3. மேலது ப.72.

4. வண்ணத்தோகை ப.48

5. மேலது ப.56

6. மேலது ப.60